1970 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்;

(இ) தாளியூர் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் முன்னாள் தலைவர் அச்சங்கத்தில் அவர்களால் கையாடல் செய்த தொகையைச் செலுத்திவிட்டார். அவர் மீது தொடர்ந்த கிரிமினல் வழக்கு வாபஸ் பெறப்பட்டது.

(உ) ஆம்.

(எ) அது போன்ற பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவை யேதும் ஏற்படவில்லை.

குடியாத்தம் வட்டக் கூட்டுறவு விற்பனை சங்கம்

* 209 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலுகா கூட்டுறவு மார்க்கெட்டிங் சொசைட்டியின் தலைவர் திரு. ஏ. என். செங்கைய்யா அவர்கள், அதிகாரிகளின் ஊழலைப் பற்றி கனம் கூட்டுறவு அமைச்சர் அவர் களுக்கு 1—12—1969 தேதி எழுதிய புகார் கடிதம் சேர்ந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) திரு. ஏ. என். செங்கையாவின் 1—12—1969 தேதிய மனு வேலூர் துணைப் பதிவாளருக்கு வந்து சேர்ந்துள்ளது.

(இ) இந்த விஷயம் காவல் துறையினரின் விசாரணைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்த புகாரில் குறிப்பிட்டது போல் அந்தந்த அதிகாரிகள், சம்பந்தப்பட்டவர்கள் எந்த அளவுக்கு ஊழல் செய்து இருக்கிறார்கள். அந்த புகாரிலே கண்டுபிடிக்கப்பட் டுள்ள மேல் அதிகாரிகளே அதை நேரடியாக, ஆதாரபூர்வமாக கண்டுபிடித்ததாகவும் சொல்லப்பட்டபிறகும், நீண்ட நாளைக்கு பிறகு போலீசுக்கு தகவல் கொடுக்க தாமதம் ஏற்படுவதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது, வேலூர் வட ஆற்காடு மாவட்ட சூப்பிரண்டெண்டு ஆப் போலீசுக்கு புகார் செய்து இருக்கிறார்கள். 22—4—1970 அன்று புகார் செய்யப்பட்டு இருக்கிறது. அதன் மேல் போலீசார் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். எந்தெந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்று தெரியவில்லை. உரம் வாங்குவதிலே தவறுதல் நடந்தது. அதிகாரிகள், கோவாப்ப ரேடிவ் அதிகாரிகள், கண்டுபிடித்ததன் பேரில், புகார், முறைப்படி போலீசுக்கு போய் இருக்கிறது. அதன் மேல் மேற்கொண்டு நட வடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 10 00 திரு. வி. கே. கோதண்டராமன் : இப்படி போலீஸ் அதிகாரிகள் விசாரணைக்கு விட்டாலும் சரி, அல்லது கூட்டுறவு இலாகா அதிகாரிகளே அந்த விசாரணையை நடத்தினாலும் சரி. தொடர்ந்து வருடக் கணக்கில் இந்த வழக்குகள் நீடித்துக்கொண்டே போகிறதே ? நாங்களும் இதுபற்றி கேட்டுக்கொண்டிருக்கிறோம். அமைச்சர் அவர்களும் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து இப்படி வருடக் கணக்கில் நீடித்தால், அதை மூடி மறைக்கக்கூடிய அளவுக்குத் தான் இருக்கிறது என்று சொல்லக் கூடிய நிலைமை தான் ஏற்படும். ஆகவே, இதற்கெல்லாம் உடனடியாக பரிகாரம் தேடக்கூடிய அளவுக்கு, குறுகிய காலத்தில் விசாரணை செய்து முடித்துக்கொடுக்கக்கூடிய அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். சட்டம் வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தச் சட்டம் வெகு விரைவிலே வருமா? இது சம்பந்தமாக ஏதாவது உத்தரவு பிறப்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, எந்தத் தவறு நடந்தாலும், அதை மூடி மறைப்பதற்கு நான் சம்மதிக்க மாட்டேன் என்ற உறுதியை உறுப்பினர் அவர்களுக்கு தெளிவாகவும், அழுத்தமாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். நடைமுறையில் காலதாமதம் ஏற்படுகிறது என்பதை இந்த அமைச்சு உணர்கிறது. முதலில் அதிகாரிகள் விசாரணை நடத்தவேண்டும். அதற்கு பிறகு தணிக்கை அதிகாரிகள் பார்க்கவேண்டும். அதற்குப் பிறகு போலீசுக்குப் போகவேண்டும். அவர்கள் விசாரிக்கவேண்டும். அதற்குப் பிறகு வழக்கு தாக்கல் செய்யவேண்டும். தணிக்கை அதிகாரிகளின் கையிலிருந்து தாண்டுவதற்கே இரண்டு, மூன்று வருடங்கள் ஆகிவிடுகின்றன. நடைமுறையை துரிதப்படுத்துவதற்கும், தவறு செய்தவர்கள் மீது சீக்கிரம் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் தகுந்த முறையில் கூட்டுறவுத் துறையை ஒட்டிய போலீஸ் பிரிவை சற்று விரிவுபடுத்துவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்தினிடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மூடப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் . திருவாளர்கள் கருப்பையா, சுவாமிநாதன், சித்தன் ஆகிய மூன்று உறுப்பினர்களும் மதுரை தியாகராயர் பொறியியல் கல்லூரி மூடப்பட்டிருப்பது குறித்து விவாதிப்பதற்காக இந்தப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும் என்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. கருப்பையா அவர்கள் சுருக்கமாக விளக்கலாம்.